காலியிடம் இருக்குமாயின், அதனை வணிக வரித் துறைக்கு ஒதுக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கும்பட்சத்தில், அவ்விடத்தில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கோ அல்லது காலியாக உள்ள அரசுக் கட்டடங்களில் இடம் ஒதுக்கும்பட்சத்தில், அவ்விடங்களில் வணிக வரி உதவி ஆணையர், செங்கல்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய வரி விதிப்பு வட்ட அலுவலகங்களைக் கட்டித் தரவோ உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

24—

குடிநீர் வசதி

***45543 திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, நாய்க்கனேரிமலை ஏரியிலிருந்து ஆம்பூர் நகருக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 28-12-2015 அன்று துவக்கி வைக்கப்பட்ட வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்

வாயிலாக 1.20 இலட்சம் மக்கள்தொகை கொண்ட ஆம்பூர் நகருக்கு நாள் ஒன்றுக்கு 9.22 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், நாய்க்கனேரிமலை ஏரியிலிருந்து ஆம்பூர் நகருக்கு குடிநீர் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆம்பூர் நகராட்சிக்கு, காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதேநேரத்தில் ஆம்பூரை ஒட்டியிருக்கக்கூடிய, ஆம்பூர் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த வெங்கடசமுத்திரம், கம்மகிருஷ்ணபள்ளி, கரும்பூர், மிட்டாளம், வடசேரி, குமாரமங்கலம், மலையம்பட்டு, தென்னம்பட்டு, கொல்லமங்கலம் போன்ற 17 பஞ்சாயத்துகளில் 1,000 அடி ஆழத்திற்கு ஆழ்துளைக் கிணறு போட்டால் மட்டுமே குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கின்றது. ஏற்கெனவே நான் இதுகுறித்து இம்மன்றத்தில் கேள்வியாகவும் எழுப்பியுள்ளேன். மேற்கண்ட 17 பஞ்சாயத்துகளுக்கும் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இணைப்பு வழங்கப்படுமேயானால், ஏறத்தாழ 75 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட 17 பஞ்சாயத்துகளுக்கும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் இணைப்பு வழங்க ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலுள்ள, வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க மேட்டூர்*

2016 ஜனவரி 22]

அணையின் கீழ்ப்புறம் சொக்கானூர் அருகே காவேரி ஆற்றின் நீரினை ஆதாரமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட திட்டம்தான் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம். வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலைக் கருத்திற்கொண்டு, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், நிதியாதாரங்கள் எதுவும் இறுதி செய்யப்படாமலும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்த நிறுவனம் தேர்வு செய்யப்படாமலும், பணியாணைகள் எதுவும் வழங்கப்படாமலும் 25-1-2011 அன்று அவசர கோலத்தில் அப்போதைய துணை முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. தமிழக மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வேலூர் மாவட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கும்பொருட்டு, 1,295 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்திற்கு 30-12-2011 மற்றும் 5-3-2012 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாகப் பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டன. இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 28-12-2015 அன்று திறந்து வைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், ஆம்பூர் நகராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்க திட்டம் அறிவிக்கப்பட்டு, ஆம்பூர் நகராட்சியில் தற்போதைய மக்கள்தொகையான 1.20 இலட்சம் பேருக்கு நாளொன்றுக்கு 9.22 மில்லியன் லிட்டர் அளவிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஆம்பூர் நகராட்சிப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 2 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆம்பூர் நகராட்சியில் 2042 ஆம் ஆண்டில் இருக்கக்கூடும் எனக் கருதும் மக்கள்தொகையான 1.93 இலட்சம் பேரின் உச்சகட்ட தேவையான 15.85 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் இந்தத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த ஊர்களுக்கும் சேர்த்துத்தான் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதேபோல், வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், நெடுஞ்சாலைத் துறையைப்

பொறுத்தவரையில், NHAI-யிடமிருந்து அனுமதி வராமல் உள்ளது. அந்த அனுமதி கிடைத்தால் வேலூர் ஊராட்சிக்குட்பட்ட ஒன்றியங்கள் மற்றும் ஆற்காடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளெல்லாம் கண்டிப்பாக சரி செய்யப்படும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து ஊர்களுக்கும் சேர்த்துத்தான் முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். ஆகவே, உறுப்பினர் கேட்ட அந்தக் கோரிக்கை கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மாதனூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அகரம், அக்ரஹாரம், தோளப்பள்ளி, வளையாம்பட்டு, வேப்பம்குப்பம் போன்ற பகுதிகள் வழியாகத்தான் பைப் லைன் செல்கின்றது. ஆனால், இந்தக் கிராமங்களுக்கெல்லாம் அந்தக் குடிநீர் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கின்றது. மேலும், தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியிருக்கின்ற பல்வேறு ஊராட்சிகளுக்கு காவேரி கூட்டுக் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அதிக நேரம் மின்சாரம் வழங்கப்படவில்லை. ஒரு நாளைக்கு 2 அல்லது 3 மணி நேரம்தான் மின்சாரம் வழங்கப்படுகின்றது. ஆகவே, அந்தப் பஞ்சாயத்துகளுக்கு குறைந்தபட்சம் 6 மணி நேரமாவது மின்சாரம் வழங்கினால், அந்தக் கிராம மக்களுக்குத் தேவையான அளவிற்குக் குடிநீர் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அகரம், அக்ரஹாரம், தோளப்பள்ளி, வளையாம்பட்டு, வேப்பம்குப்பம் போன்ற விடுபட்ட பகுதிகளுக்கு அதாவது, பைப் லைன் செல்கின்ற அந்த ஊராட்சிகளுக்கும் குடிநீர் இணைப்பினை வழங்குவதோடு, மின் பிரச்சினையையும் தீர்த்து வைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 ஜனவரி 22]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மின் வெட்டே கிடையாது. அனைத்தும் சிறப்பான முறையில் இருந்து வருகிறது. மின்சாரம் கொடுக்க முடியாத இடங்களிலும் genset வைத்து மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நீங்கள் சொல்லும் இடங்களில், நமது துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

கால்நடை மருத்துவமனை

***59799 திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், குட்டகம் ஊராட்சி, குட்டகத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், குட்டகம் ஊராட்சி, குட்டகத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அரசு விதிகளின்படி, நேரடியாக கால்நடை மருத்துவமனையை அமைக்க முடியாது. முதலில் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட்டு,